திரு. செ. மாதவன் : சென்ற தேர்தலில் நடைபெற்றதுபோல் இந்தத் தேர்தலிலும் ஒரே மாவட்டத்திலோ அல்லது பல மாவட்டங்களிலோ சேர்ந்து தேர்தல் நடத்தவேண்டும், ஒரே சமயத்தில் அல்லது பகுதி பகுதியாகப் பிரித்து நடத்தவேண்டும் என்ற கருத்தை நமது அரசாங்கம் தெரிவித்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுவரையில் அரசாங்கம் கருத்து தெரிவிக்கவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு நாட்களில் அல்லது மூன்று நாட்களில் தேர்தல் நடக்கும் என்று தான் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்பொழுது தேர்தலுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற மூன்று தேதிகளில் பிப்ரவரி 26-ம் தேதி ஒரு ஞாயிற்றுக்கிழமை. சாதாரணமாக ஓய்வு நாட்களிலே தேர்தல் வைப்பதில்லை என்ற சம்பிரதாயத்தை மீறி இத்தகைய தேதி நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், இதனால் கிறிஸ்துவர்கள் மனம் புண்படாமல் இருக்க 26-ம் தேதியை மாற்றி அமைக்க இந்த அரசாங்கம் ஆலோசனை கூறுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் எலெக்ஷன் கமிஷன் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம்

* 349 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :
திரு. பி. முருகையயன் :

கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலப் பாரா—

(அ) 1965 ஜனவரி மாதம் முதல் இன்றுவரையில் அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தினால் ஆகும் பிரயாணப்படி செலவுகள் எவ்வளவு ?

(இ) இந்த சுற்றுப்பயணத்தில் தேசிய பாதுகாப்பு நிதி, தங்கம் சேர்த்த கூட்டங்கள் எத்தனை, அமைச்சர்கள்வாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The expenditure incurred from 1st January 1965 to 18th January 1966 (both days inclusive) on account of Travelling Allowance and Daily Allowance drawn by Ministers is Rs. 51,394.42.

(b) The number of meetings attended by each Minister in the course of his tour during the above period, in which National Defence Fund and gold were collected, is given below :—

Chief Minister ...	38
Minister for Home ...	20
Minister for Public Health ...	3
Minister for Co-operation ...	4
Minister for Information and Publicity ...	5
Minister for Local Administration ...	1

No separate tours were undertaken by the Minister for Industries and the Minister for Food for collection of gold and donation to National Defence Fund; but while participating in the different functions, they stressed the need for collection of gold

and donation to National Defence Fund and the gold and the donations to Defence Fund received at the functions were handed over to local officials, as usual.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இதில் அமைச்சர்கள் மட்டும் தங்கப் பத்திரத்திற்காக எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : The question does not arise.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும். அமைச்சர்களிடத்தில் அதிகமாகத் தங்கம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : அமைச்சர்களுக்கு மொத்தச் சுற்றுப்பிரயாண செலவு ரூ. 51,000 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு அமைச்சரும் எவ்வளவு பிரயாணப் படி பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : தேர்தல் பிப்ரவரியில் நடக்கும் என்றால், அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் அமைச்சர்கள் அபிஷியல் டூர் போகக்கூடாது என்ற சம்பிரதாயத்தை போன முறை அனுசரித்தார்கள். அதே ஏற்பாட்டை இந்த முறையும் ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் பற்றி சென்ற முறை அல்லது அதற்கு முன்பு என்னென்ன கட்டுப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு வந்தனவோ, அவைகளெல்லாம் இப்பொழுதும் அனுசரிக்கப்படும்.

* 350 கேள்வி.— *திரு. எஸ். ஜே. ராமசாமி :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ரஷ்யா, மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து திரும்பிய தொழில் அமைச்சர் அவர்களுக்கு நமது மாநில சர்க்கார் பிரயாணப்படி ஏதேனும் தந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

மின்சாரக் கம்பங்களுக்குச் சேதம்

* 351 கேள்வி—*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :* கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1966-ல் அடித்த புயலினால் திண்டிவனம் வட்டம், வானூர் தொகுதியில், குறிப்பாக வானூர் பிர்க்காவில் சாய்ந்து விட்ட மின்சாரக் கம்பங்களெல்லாம் நிமிர்த்தப்பட்டுவிட்டனவா ?

(இ) இல்லையெனில், அவற்றிற்கான காரணங்கள் யாவை ?